**Express Pay Order**

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009

**அரசுக் கடித எண். 41155 / பக.5(1) /2014–1, நாள். 22 .12.2014.**

அனுப்புநர்
திருமதி த.சபிதா இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்,
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல / சார் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – 2014 15ஆம் கல்வியாண்டில் இருபாலர் பயிலும் 20 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து மகளிரைப் பிரித்து பதிதாக 20 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகள் துவக்க அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது –அப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஊதியம் பெற விரைவு ஊதிய ஆணை (Express Pay Order) வழங்குதல் – குறித்து.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.65, பள்ளிக் கல்வி [பக.5(1)] துறை, நாள் 21.05.2014.
2. அரசாணை (நிலை) எண்.66, பள்ளிக் கல்வி [பக.5(1)] துறை, நாள் 21.05.2014.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 24571 / ஜி1/ இ1/ 2013, நாள் 09.12.2014.

**********

பார்வை ஒன்று மற்றும் இரண்டில் காணும் அரசாணைகளில், 2014–15ஆம் கல்வியாண்டில், இருபாலர் பயிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து மகளிரைப் பிரித்து புதிதாக முறையே 11 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளும், 9 அரசு உயர்நிலைப் பள்ளிகளும் துவக்கிட அனுமதி அளித்தும், அவ்வாறு துவக்கப்படும் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு முறையே 11 மற்றும் 9 தலைமை ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், மேற்காண் அரசாணையின்படி, தோற்றுவிக்கப்பட்டுள்ள பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு மாதாந்திர ஊதியம் பெற்று வழங்குவதற்கு ஏதுவாக விரைவு ஊதிய ஆணை (Express Pay Order) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்காண் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, தமிழ்நாடு கருவூல நிதித் தொகுப்பு தொகுதி–I, குறிப்பு–1ன் அடிப்படையில் அரசு இவ்வூரில் கொடுப்பாணையை வெளியிடுகிறது. இவ்வகையில் மேற்படி அரசாணையில் 2014–15 ஆம் கல்வியாண்டில் இருபாலர் பயிலும் 20 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து (11 + 9 பள்ளிகள்) மகளிரைப் தனியாக பிரித்து துவக்கப்பட்ட 20 அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிகளில் (11 + 9 பள்ளிகள்) தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ள பணியிடங்களில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு சம்பளம் மற்றும் இதரபடிகளுக்கான ஊதியம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பில் பெற தகுதியாகின்றனர் :–

> "2202 – பொதுக்கல்வி – 02 – இடைநிலைக் கல்வி – 109 – அரசு இடைநிலைப் பள்ளிகள் I திட்டத்தில் சேராதது AA – அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் 01 சம்பளங்கள்.
> (த.தொ.கு 2202 02 109 AA 0108)"

எனவே, இப்பள்ளிகளின் தலைமையாசிரியர்களால் தாக்கல் செய்யப்படும் சம்பளப் பட்டியலை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அவைகளை ஏற்று, சம்பளம் அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. மேற்படி புதிய பள்ளிகளுக்கான புதிய பணம் பெற்று வழங்கும் அலுவலருக்கான தொகுப்பு குறியீட்டினை வழங்குமாறும், தமிழ்நாடு கருவூலத் தொகுப்பு–70 குறித்த (MTC 70) பதிவேட்டினையும் மேற்படி புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பள்ளிகளின் உபயோகத்திற்கென வழங்குமாறும் கோரப் பணிக்கப்பட்டுள்ளேன்.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.70772/கல்வி II/2014, நாள்: 19.12.2014–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

22/12/14

அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6
மாநில கணக்காயர், சென்னை–18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15
நிதித் (கல்வி –II/ வ.செ.பொது. I & II / CMPC) துறை, சென்னை–9.

ந.க.எண் 24571/இ1/இ1/2014 நாள் -12.2014

நகல்: தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.

23/12/14

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்

பள்ளிக்கல்வி இயக்குநர்
சென்னை 6